**IN THE COURT OF THE I ADDL.DIST. COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS P.W.2**

**Pro.O.P.No. 74 /2024**

| | |
|---|---|
| Name | : சின்னக்கருப்பன் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30.10.2025.

மனுதாரரர் தரப்பில் சாட்சி ஆஜர். நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக முதல் விசாரணை. எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அது ம.சா.2 ன் சாட்சியமாக பதிவு செய்யப்படுகிறது.

எனது ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முருகேசன் என் உறவினர். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 உயிலில் உள்ள கையெழுத்துக்கள் மேற்படி முருகேசனுடைய கையெழுத்துக்கள் ஆகும். அவர் உயிலில் கையெழுத்திட்டதை நான் நேரில் பார்த்தேன். வேலன் மற்றும் முத்து ஆகியோர்களும் உடன் இருந்தார்கள். நான் சாட்சி கையெழுத்து போட்டதை முருகேசன் பார்த்தார். மேற்படி உயிலில் என்னிடம் குறிப்பிட்டு காட்டப்படும் கையெழுத்து என்னுடைய தான். அது **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

முருகேசன் கையெழுத்திட்ட பிறகு தான் சாட்சிகள் கையெழுத்திட்டோம். மற்ற சாட்சிகள் கையெழுத்திட்டதையும் முருகேசன் பார்த்தார்.

Sd/- சின்னக்கருப்பன்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.11.01 11:25:07 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.